# எதிர்க்கட்சியினருக்கு கொலைப் பயமுறுத்தல்

வலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 11 இதழ் 198
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27— 08 — 1992

(கொழும்பு)
எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் உடலர் உட்பட பல எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு தினமும் கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது. தொலைபேசி மூலமும், மொட்டைக்கடிதங்கள் மூலமும் இந்த கொலைப்பயமுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தங்கள் பாது

[4ம் பக்கம் பார்க்க]

## தமிழ் கட்சிகள் புதிய திட்டம் சமர்ப்பிக்கும்

(கொழும்பு)
முஸ்லிம் காங்கிரஸ் முன் வைக்க திட்டத்தை தமிழ்க் கட்சிகள் நிராகரித்ததையடுத்து தமிழ்க்கட்சிகள் புதிய

[4-ம் பக்கம் பார்க்க]

## வடக்கு-கிழக்கு விவசாயிகளுக்கு $52\frac{1}{2}$ கோடி ரூ. உதவி

(கொழும்பு)
வட - கிழக்கு பகுதியில் ராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 52 கோடியே 50 லட்சம் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.
வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாவில் மீண்டும் பாரிய தாக்குதலுக்கு படையினர் தீவிர ஆலோசனை?

(கொழும்பு)
யாழ். குடாநாட்டில் மீண்டும் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் நோக்கில். முப்படைத் தளபதிகளும், கூட்டுப் படைத் தலைமைத் தளபதியும் தீவிரமாக ஆலோசித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கான தீவிர செயற்பாடுகள் கொழும்பு. வவனியா அநுராதபுரம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னர் அறிவித்தது போலன்றி இம்முறை தீவுப் பகுதியையும் உள்ளடக்கி ஒரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

தெற்கில் அரசுக்கு எதிராக எழுந்துள்ள அரசியல் கொந்தளிப்பை சமாளிக்க வடக்கில் படையினருக்கு வெற்றி தேவைப்படுவதாகவும் மற்றொரு பத்திரிகை குறிப்பிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

### காரை நகரிலிருந்து ஷெல் வீச்சு

(வட்டுக்கோட்டை)
காரைநகரிலிருந்து இராணுவத்தினரால் நேற்று மாலை 4 மணியளவில் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள், திருவடி

(4-ம் பக்கம் பார்க்க)

## 300 கனரக வாகனங்கள் மாதகல் பண்ணையில் குவிப்பு

(யாழ்ப்பாணம்)
மாதகல் பிரதான வீதி ஊடாக படையினர் நூற்றுசகணக்கான கனரக வாகனங்களை பண்ணையில் கொண்டு வந்து நிறுத்தி வைத்திருப்பதாக இராணுவத்தினரின்பிடியிலிருந்து தப்பி வந்தவர்கள் தெரிவித்துள்ளனர். ட்ரக், டாங்கிகள், பீரங்கி வண்டிகள் உட்பட 300கும் மேற்பட்ட வாகனங்கள் அவ்விடத்தில் காணப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் படையினர் பொதுமக்கள் விட்டுவந்த மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டிகளை தமதுபாவிப்பிற்காக எடுத்து ஓடுகின்றனரென்றும் தெரிவித்தனர்.

பெரும்தொகையான படை

4ம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பு நோக்கி மாதகலிலிருந்து ஷெல் எறி

(வட்டுக்கோட்டை)
மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று நண்பகல் 12-45 மணியளவில பண்டத்தரிப்புப் பகுதியைநோக்கி ஏவிய ஷெல் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததால் பண்டத்தரிப்பைச் சேர்ந்த பலர் காயமுற்றதா

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னார் சனிவிலேஜ் அகதிமுகாம் தீக்கிரையானது

(மன்னார்)
மன்னார் 'சனிவிலேஜ்' கிராமத்தில் அகதிகள் தங்கியிருந்த பாரிய அகதிமுகாம் ஒன்று மர்மமான முறையில்

[4ம் பக்கம் பார்க்க]

## ஜேர்மன் வானொலி நிலையத்தில் இரு வாகனங்கள் குண்டு வீசி அழிப்பு

[திருகோணமலை]
திருகோணமலையில் உள்ள ஜேர்மன் வானொலி நிலையத்திலிருந்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இரண்டு வாகனங்களை இடைவெளியில் மறித்து ஸ்ரீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீசி அழித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மன் வானொலி நிலையத்திற்குச் சொந்தமான இவ்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு பாதுகாப்பு குறித்து கொழும்பில் முக்கிய மாநாடு

[கொழும்பு]
கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலை குறித்து கொழும்பில் நேற்று முக்கிய மாநாடொன்று நடைபெற்றுள்ளது.
இம்மாநாடு கிழக்கு பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் படைத்தளபதிகள், அரசு உயர் அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

[4ம் பக்கம் பார்க்க)

## ★ அடுத்த கட்ட தாக்குதல் படைத் தளபதிகள் நேற்று பலாலி முகாமில் மாநாடு

(கொழும்பு)
பலாலி இராணுவத் தளத்தில் படைத்தளபதிகளின் முக்கிய மகாநாடொன்று நேற்று காலை நடைபெற்றுள்ளது.

அடுத்தகட்ட படை நடவடிக்கை குறித்தும், படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பகுதிகளில் சிவில் நிர்வாக நடவடிக்கை குறித்தும் இம்மாநாட்டில் தீவிரமாக ஆராயப்பட்டதாம்.

இம்மாநாட்டில் கூட்டுப் படைத் தளபதி ஹமில்டன வனிக்கசூரிய, வட பிராந்திய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, கடற்படைத் தளபதி, வட பிராந்தியப் பொலிஸ் மா அதிபர் ஏ. ஈ. ஆனந்த

(4ம் பக்கம் பார்க்க)

## வலி-வடக்கிற்கு ஹமில்டன் விஜயம்

[கொழும்பு]
வலி வடக்கு, வலிமேற்கு பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பல பகுதிகளுக்கு கூட்டுப் படைத்

(4ம் பக்கம் பார்க்க]

## கிழக்கில் பாதுகாப்பு தீவிரமடைகிறது

(மட்டக்களப்பு)
திருமலை அம்பாறை, மட்டக்களப்பில் படை முகாம்களின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாககூட்டுப் படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

4ம் பக்கம் பார்க்க)

## சாகும்வரை உண்ணாவிரதம் அம்பாறை விவசாயிகள் முஸ்தீபு

(மாத்தறை)
மொனறாகலை மாவட்டத்தில அமெரிக்க நிறுவனமொன்றுக்கு பத்தாயிரம் ஏக்கர் காணியை வழங்க

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை இலக்கிய, சோதி - நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### பக்தி நூல்கள்

பக்தி நிறைந்த படங்களுடன் சாயி பஜனை ரூபா 20/-. சரஸ்வதி பாமாலை ரூபா 20/-. பிள்ளையார் கதை ரூபா 20/-. தினசரி தோத்திரத் திரட்டு ரூபா 20/-. ஆறுபடை கந்த ஷஷ்டி கவசம் ரூபா 20/-. அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-6712)

### இலவச திருமண சேவை

37வயது உத்தரம், செவ்வாய் அற்ற ஆசிரியைக்கு ஏற்ற அரச தனியார்துறை மணமகன் தேவை சகல தரங்களிலும் குறிப்புகள் உண்டு. நாடுபவர்கள்: ஞாயிறு காலை யில் சந்திக்கலாம். து. விமலா, யாழ்/நாச்சிமார் கோவிலடி. (சி-6722)

### முருகன் தமிழ் அர்ச்சனை மலர்

தேர்த் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் கோவில் வாசலில் அமைந்திருக்கும் அண்ணா தொழிலகத்தாரின் விளம்பர நிலையத்தில் அண்ணா உற்பத்திப் பொருட்களை வாங்கி முருகன் அர்ச்சனை மலரை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். (எ-2389)

### விற்பனையாகின்றது

நாடறிந்த எழுத்தாளர் நவந்தன் எழுதிய மானவீரன் கும்பகருணன் விலை ரூபா 25/- மற்றும் குழந்தைக் கவிஞர் த. துரைசிங்கம் எழுதிய அனைத்து நூல்களுக்கும் பாலாஜி புத்தகசாலை, நல்லை ஆதீனம். (சி-6731)

### பாலாஜி புத்தகசாலை நல்லை ஆதீனம்

ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள் இந்தியா நாவல்கள் சமய சஞ்சிகைகள் சிறுவர்களுக்கான புத்தகங்கள் மற்றும் பல. பாலாஜி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி 6732)

### தேவை

1972 - 1992 வரை அன்புஜீயின் தமிழ் அன்புக்குரல் பத்திரிகைகள், புஸ்தகங்கள் தேவை பணம் வழங்கப்படும். E. V. K. Anpalagan, 50/44, வைரவர் கோவில் வீதி, யாழ்ப்பாணம். (எ 6737)

### "புதிய கலை"

அமரர் V. செல்வநாயகம் அவர்களின் உறவினரின் இல்லத்திலிருந்தோ வேறு இடங்களில் இருந்தோ இயங்கிய அனைத்தும் Russiva என்ற அமைப்பாக மாற்ற உள்ளது. E.V.K. Anpalagan. (சி-6738)

### சோதிடம்

Anpugee, Shyanbugee 09-09-1992 வரை தனித்துவமாக இயங்குகின்றது. 29-10-1992 ற்குப் பின்னர் "Russiva" எமக்காக விரதம் அனுஷ்டிப்போருக்கு மட்டும். 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர். (சி-6736)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் டில்கா வாச்வேக்ஸ். 284 ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம் (சி-6733)

### பரீட்சை (ஆண்டு 4)

ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை (தமிழ் கணிதம், ஆங்கிலம்) 30-08-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப 11-00 நேரங்களில் நடைபெறும் வெளிமாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6728)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

12 - 08 - 1992 மாலை 6-00 மணி அளவில் கொக்குவில் கோயில் வீதியில் தங்க அச்சரக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டு உடுவில் தெற்கு சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளவும். (ஏ-6740)

## தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய உற்சவம் 29ல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 29ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 10 திகதி நிறைவுபெறும்.

29ம் திகதி சனிக்கிழமை மு ப. 11-30 மணியளவில் கொடியேற்றம் ஆரம் மாகும். தொடர்ந்து அடுத்த மாதம் 6ம் திகதி ஞாயிறு மாலை வேட்டைத் திருவிழாவும், 7ம் திகதி திங்கள் மாலை சப்பறத் திருவிழாவும், 8ம் திகதி செவ்வாய் காலை 8 மணிக்கு ரதோற்சவமும், 9ம் திகதி புதன் காலை தீர்த்தோற்சவமும் நடைபெற்று அன்று மாலை கொடியிறக்கு திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறும். (அ)

## போக்குவரத்து சுகாதார ஏற்பாடுகள் பூர்த்தி

(மானிப்பாய்)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தை யொட்டி சகல ஒழுங்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக கடந்த 17ம் திகதி சனிக்கிழமை தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

திருவிழாக் காலங்களிலும் தேர்த்திருவிழாவின் போதும் போககுவரத்து வீதி ஒழுங்கு முறைகளைக் கவனிப்பதற்கு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரும், சாரணர் இயக்கமும் இணைந்து செயலாற்றுவார்கள்.

பொது சுகாதாரம் மற்றும் சுத்தம் பேணுதல் சம்பந்தமான பொறுப்புக்களை பிரதேச சபையிடமும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உற்சவ காலத்தின்போது வாகனப் போக்குவரத்து 8ம் கட்டையுடன் நிறுத்தப்படும். பிரதான வீதி ஓரங்களில் கடை போடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் தெற்குப் பக்கமாகவுள்ள ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் மட்டுமே கடைகள் அமைக்க அனுமதி வழங்கப்படுமெனவும் அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (71)

## 2-ம் வருட நினைவஞ்சலி



அமரர்

### சிவப்பிரகாசம் அருணகிரிநாதன்

(கால்நடை உத்தியோகஸ்தர் வட்டுக்கோட்டை)

ஆண்டவன் படைப்பு: 24-02-1966 வான் அரக்கன் அழிப்பு: 20 08-1990

திதி: 27-08-1992

எம் அன்புத்தெய்வமே உங்கள் பூதவுடல் அழிந்தாலும் வஞ்சமில்லாமுகமும் கள்ளம் இல்லா வெள்ளை உள்ளமும் என்றென்றும் எம் இதயத்தை விட்டகலா.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி
உம் பிரிவால் வாடும்:

தாய்-தந்தை: சிவப்பிரகாசம் தருமநாயகி
அக்கா: ச. கனகமலர்
அண்ணன்மார்: சி லோகநாதன், சி. செல்வநாதன் சி. பரம்சோதிநாதன், சி. சிவநாதன், சி. அருள்நாதன் (தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்)
தங்கை: சி. இந்திரமலர்
மைத்துனர்: வீ. சண்முகநாதன்,
மருமக்கள்: ச. பிரசாந், ச. துஷ்சாந், ச. பிரசாந்தி,
அண்ணிமார்: நளினி, அம்பிகா, மைதிலி
பெறுமக்கள்: அஜேஜா, தர்சிகா, பிரகாஸ், கிரிதாசன்
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (சி-6729)

## மாவீரர் நினைவு விழா

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டத்தின் அச்சுவேலியை உள்ளடக்கிய கரவெட்டி வட்டத்தில், இதுவரை காலமும் யூலை, ஆகஸ்ட் மாதங்களில் வீரச்சாவு எய்திய மாவீரர்களின் நினைவு விழா இன்று 27ம் திகதி இரவு, துன்னாலை மேற்கு ஞானாசாரியார் கல்லூரிக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது

கரவெட்டி வட்ட அரசியல் பொறுப்பாளர் மணிவண்ணன் தலைமையில் நினைவு விழா நடைபெறவுள்ளது 160)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

பாட்டு: எஸ். கணபதிப்பிள்ளை
வயலின்: ஆர். ராதாகிருஷ்ணன்:
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(உடுப்பிட்டி)

செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறை பிரிவுக்கான வருடாந்தப்பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ம் திகதி பருத்தித்துறை பிரிவு தலைவர் பேராசிரியர் திரு. வி. கே. கணேசலிங்கம் தலைமையில் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். [150]

## உலர் உணவு நிவாரணம்

[யாழ்ப்பாணம்]

92 ஆகஸ்டிற்கான நிவாரண உலர் உணவு விநியோகம் இம்மாதம் 27-ந் திகதி தொடக்கம் நான்கு கட்டங்களும் சகல நிவாரணக் கிளைகளிலும் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வெளிநோயாளர் சிகிச்சை நிலையம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை நிர்வாகம், இராணுவ நடவடிக்கையினால் மானிப்பாய் பகுதியில் தஞ்சமடைந்திருக்கும் இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி மானிப்பாயில் வெளிநோயாளர் சிகிச்சை நிலையமொன்றை ஆரம்பித்துள்ளது. [72]

## திருவிழா

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறைரேவடிக் கடற்கரை அன்னை ஆரோக்கிய மாதா தேவாலய கொடியேற்றத் திருவிழா இம் மாதம் 29-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

தொண்டமானாறு

## செல்வச்சந்நிதி ஆலயம் வருடாந்த உற்சவகால நிகழ்வுகள்

நிகழும் ஆங்கிரச வருடம் ஆவணி மாதம் 12 ம் நாள்

**(28-08-92) வெள்ளிக்கிழமை**

காலை 9-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பம், 5-ம் திருவிழாவில் இருந்து காலைத்திருவிழா நடைபெறும். (31-08-92)

- ★ பூங்காவனம் சனிக்கிழமை 05-09-92 பகல் 10 மணி.
- ★ சப்பறம் வியாழக்கிழமை 10-09 92 மாலை
- ★ தேர் வெள்ளிக்கிழமை 11-09-92 காலை
- ★ தீர்த்தம் சனிக்கிழமை 12-09 92 காலை 7 மணி.
- ★ மௌனத்திருவிழா 12-09-92 மாலை

நாட்டுநிலைமை காரணமாக இரவுத் திருவிழாக்கள் மாலை 6 மணிக்கு முடிவடையும்.

முக்கிய குறிப்பு:

திருவிழா சம்பந்தமாகவும் கோவில் கைங்கரியங்கள் பற்றியும் விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்க

பிரதமகுரு

**சிவஸ்ரீ க. உலககுருநாத ஐயர்**

(ஆலய உரிமையாளர்)

(சி-6739)

சங்கானை உ. அ. அ. பிரிவில்

# 12 முகாம்களில் 934 குடும்பங்களை சேர்ந்த 4120 பேர் தஞ்சம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 12 முகாம்களிலும் 934 குடும்பங்களைச் சேர்ந்த 4120 பேர் தங்கியுள்ளனர். இவர்கள் இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, சிலலாலை, வடலியடைப்பு, மாரீசன்கூடல் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

விபரம் வருமாறு:

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 106 பேரும், சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் 153 குடும்பங்களைச் சேர்ந்த 643 பேரும், பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோவிலில் 69 குடும்பங்களைச் சேர்ந்த 292 பேரும், சங்கானை சலேசியார் தேவாலயத்தில் 316 குடும்பங்களைச் சேர்ந்த 1347 பேரும், சங்கானை அரசடி வைரவர் கோவிலில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேரும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் 77 குடும்பங்களைச் சேர்ந்த 416 பேரும், சங்கானை அ. மி. த. க. பாடசாலையில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 230 பேரும், சங்கானை முருகமூர்த்தி கோவிலில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 255 பேரும், சங்கானை நிகரை வைரவர் கோவிலில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 86 பேரும், சித்தன்கேணி பிள்ளையார் கோவிலில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 71 பேரும், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 185 பேரும், சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலையில் 83 குடும்பங்களைச் சேர்ந்த 450 பேரும் தங்கியுள்ளனர். (137-இ)

---

## கோழிக்கறி சமைத்து சாப்பிட்ட திருடர்கள்

(சித்தன்கேணி)

பண்டத்தரிப்பு சாந்தையில் வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் வீட்டில் திருடர்கள் கோழிக்கறி சமைத்து சாப்பிட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

பண்டத்தரிப்பு சாந்தையில் வைத்தியசாலை ஊழியர் ஒருவர் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து குடும்பத்தினருடன் வீட்டில் இருந்து புறப்பட்டு பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் தங்கியிருந்தபோது திருடர்கள் இவருடைய வீட்டினுள் புகுந்து மரத்திலிருந்த கோழிகளைப் பிடித்து வீட்டில் இருந்த உணவுப்பொருட்களையும் எடுத்து சமைத்து சாப்பிட்டுவிட்டு சென்றுள்ளனர். (இ-137)

---

## செல்வசந்நிதி உற்சவம் நாளை ஆரம்பம்

(உடுப்பிட்டி)

செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த உற்சவ கால ஏற்பாடுகளை பருத்தித்துறை பிரதேசச் செயலர் திரு. எஸ். முருகேசபிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாலயத்திற்கு அதிகமாக வரும் பக்தர்களுக்கு வசதியளிக்கும் வகையில சுகாதாரம், குடிநீர்வசதிகளை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் உதவியுடன் செய்யப்பட்டுள்ளன.

ஆலய வருடாந்த உற்சவம் நாளை 28ம் திகதி ஆரம்பமாகவுள்ளன. (150)

---

## அகதி முகாம் அமைத்து உதவி

(உடுவில்)

மாதகல், பண்டத்தரிப்பு போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் வழிபடுவோர் சங்கமும், தர்மகாத்தா சபையும் ஒருங்கிணைந்து முகாம் அமைத்து ஆதரித்து வருகின்றனர். (109)

---

## திருமலையிலிருந்து 3,600 தொன் மா எடுத்துவர முயற்சி

(நல்லூர்)

கொழும்பிலிருந்து புறப்படவிருந்த குமணக்கப்பல் நாமதிதே புறப்படுமென்பதால் பருத்தித்துறை துறைமுகத்தில் தங்கியிருக்கும் கப்பலை திருகோணமலைக்கு அனுப்பி 3600மெ தொன்மா எடுத்துவர அனுமதி அளிக்குமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகத்தை, யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் சர்வதேச செஞ்சலுவைச் சங்கம் மூலமாக கேட்டுள்ளார். (158)

---

## மட்டு. அகதி முகாம்களில் தினமும் தேடுதல் வேட்டை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை, வாகரைப் பகுதிகளிலுள்ள அகதி முகாம்களில் இராணுவத்தினர் தினந்தோறும் தேடுதல் நடத்தி வருகிறார்கள்.

தேடுதலின்போது விசாரணை என்ற பெயரில் பல அப்பாவித் தமிழர்கள் படையினரால் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இவ்வாறு பிடித்துச் செல்லப்படும் தமிழர்கள் இதுவரையும் விடுவிக்கப்படவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது. (ரி)

---

## சம்பளப் பணம் கொள்ளை: பெண் உட்பட 4 பேர் கைது

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்களின் 48 லட்சம் ரூபா சம்பளப் பணம் இரத்மலானையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரு பெண் உட்பட நால்வர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

10 லட்சம் ரூபா பணமும் ஒரு தன்னியக்க துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி நாலு சந்தேகநபர்களுக்கும் ஜே. வி. பி இயக்கத்தினருக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் இந்தியாவில் தற்சமயம் உள்ள ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் உத்தரவின் பேரில் மேற்படி கொள்ளை இடம்பெற்றதாகவும் பொலிசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

---

## வருடாந்த பொதுக்கூட்டம்

(நெல்லியடி)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம், சங்கத் தலைவர் திரு. எம். ஜெகநாதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை, சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தலைமைக் காரியாலய பரிசோதகர் திரு எம் கனகசபாபதி. கூட்டுறவு ஆணையாளரின் பிரதிநிதி திரு. கே. குமாரகுலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (160)

---

## 800 குடும்ப சுகாதார ஊழியர் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

சுகாதார அமைச்சு மேலும் 800 குடும்ப சுகாதார ஊழியர்களை அடுத்த இரண்டு மாதங்களில் நியமிக்கும்.

இந்த ஊழியர்கள் பின்தங்கிய கிராமப் புறங்களுக்கு ஆரம்ப நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பார்கள்.

1000 பேருக்கு ஒரு குடும்ப சுகாதார ஊழியர் என்ற அடிப்படையில் இத்தகைய ஊழியர்களை நியமிப்பது அரசின் நோக்கமாகும்.

தற்சமயம் 3000 பேருக்கு ஒரு ஊழியர் என்ற விகிதத்தில் கடமையாற்றுகிறார்கள் எனவும் தெரியவருகின்றது. (சு)

---

## பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ் வழங்க துரித நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறை காணிப் பதிவகத்தில் தற்போது சகல வேலைகளும் துரிதமாக நடைபெற்றுவருவதையடுத்து கடவுச்சீட்டு, வெளிநாட்டுத் தேவை தவிர்ந்த ஏனைய அவசிய தேவைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் ஒரு சில தினங்களில் வழங்கப்பட்டுவருகின்றன.

1988, 1989ஆம் ஆண்டுகளில் பிறப்பு, இறப்பு, விவாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து இதுவரையும் அவற்றிற்குரிய சான்றிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்கள், உடனடியாக தம்முடன் தொடர்புகொள்ளுமாறு பருத்தித்துறைப்பெரும்பாக காணிப்பதிவக மேலதிக மாவட்டப்பதிவாளர் திரு. கே. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார். (61)

---

## 100 உழவு இயந்திரங்கள் தடுத்துவைப்பு

(வவுனியா)

வடபகுதியிருந்து அத்தியாவசிய உணவுப்பொருள்களை ஏற்றிச்சென்ற 100க்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் வவுனியாவில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த உணவுப்பொருட்களுடன் தடைசெய்யப்பட்ட பொருட்களையும் மறைத்துக் கொண்டு செல்ல முற்பட்டபோதே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர் என இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (கே-ரி)

---

## இடைக்கால நிர்வாகத்திடம் சகல பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமைக் கிளையின் முன்னாள் நிர்வாகம், சகல தஸ்தாவேஜுகளையும் தற்போதைய இடைக்கால நிர்வாகத்திடம் ஒப்படைத்து விட்டதாக முன்னாள் தலைவர் டாக்டர் நச்சினார்க்கினியார் தெரிவித்துள்ளார்.

தமது முன்னைய நிர்வாகம், தற்போதைய இடைக்கால நிர்வாகத்திடம், கையிருப்பிலிருந்த பெறுமதிமிக்க பொருட்கள் சகல ஆவணங்கள், களஞ்சியங்கள், அசைவுள்ள அசைவற்ற சொத்துக்கள், நிதி விபரங்கள், பொறுப்புகள் அனைத்தும் உடனடியாக ஒப்படைத்துள்ளதாக டாக்டர் நச்சினார்க்கினியார் மேலும் தெரிவித்துள்ளார். (வி)

---

## மூன்றாவது தொடர் உலர் உணவு அட்டை விநியோகம்

(புலோலி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்தோருக்கான மூன்றாவது தொடர் உலர் உணவு அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மூன்றாவது தொடர் உலர் உணவு அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம். (61)

---

## அங்குரார்ப்பண கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி உழைக்கும் மகளிர் நிறுவன அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 29-ம் திகதி கைதடியிலுள்ள அறவழிப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

திருமதி சி. செல்லக்கிளி தலைமையில் நடைபெறும் இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உழைக்கும் மகளிர் நிறுவன இணைப்பாளர் வி ஜி. தங்கவேல நிறுவன நோக்கம் பற்றி உரையாற்றவுள்ளார். (ரி)

---

## பண்டத்தரிப்பு தபாலகம் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக பண்டத்தரிப்பு தபாலகம் மூடப்பட்டு தற்காலிகமாக சங்கானை தபால் அலுவலகத்தில் செயற்பட்டு வருகின்றது. காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை இங்கு பண்டத்தரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நேரில் சென்று தங்களுக்கு வரும் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (72-அ)

---

## மேலதிக பொருட்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

'ஒப்பரேசன் பூம்பம்' நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் சங்கானை, மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தால் செயல்படவுள்ள பிரதேசங்களில் தஞ்சம்புகுந்துள்ளதால், அப் பல நோ. கூ. சங்கங்களுக்கு மேலதிகமான பொருட்களை அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் அரச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் செயலக வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. [161]

---

## போர்க் கால எழுச்சிக் கூத்து

(உடுவில்)

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் இன்றைய போர்க்கால சூழ்நிலைகள், மக்களுடைய நடவடிக்கைகள் ஆகியவற்றை விளக்கும் எழுச்சிக் கூத்து ஒன்று உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. (109)

---

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கோட்ட கொத்தணி அதிபர்களின் கூட்டம் இம்மாதம 29-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இதே நாளில் மு. ப. 10-30 மணிதொடக்கம் யாழ். கல்விப்பகுதியினர் கலந்து கொள்ளும் பண்டத்தரிப்பு ஆண்டு—6, ஆண்டு—11 பாடசாலை அதிபர்களுக்கும் சகல சேவைக்கால ஆலோசகருக்கும் முக்கிய கூட்டம் நடைபெறும். (சு)

---

## ஆங்கில வகுப்பு

(திருநெல்வேலி)

91-92ம் ஆண்டு கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான (கெல்ற்) ஆங்கில வகுப்புக்கள் எதிர்வரும் 1ம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. (157)

---

### பாதிப்பு வாராமல் பார்

குடையால வட்டங் கொடிமுரசு தீபம்
படைசா மரைவீசும் பக்தர்—புடைசூழ
வீதிவலம் வரும் வேந்தனே நல்லூரா
பாதிப்பு வாராமற் பார்.

— இ. இராசரத்தினம்

[இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் 25-ம் திருவிழா]

இந்திய எல்லைக்குள் ஊடுருவிய

# பாகிஸ்தான் ஹெலிகொப்டரை இந்தியபடை சுட்டுவீழ்த்தியது

## இராணுவ பிரிகேடியரும் பலி

(புதுடில்லி)

பாகிஸ்தான் விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று இந்தியப் படையினால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதனால் ஹெலிகொப்டரில் இருந்த பாகிஸ்தான் இராணுவ பிரிகேடியர் ஒருவர் கொல்லப்பட்டார் என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.

இச்சம்பவம் இம்மாதம் 18ந் திகதி இந்திய எல்லையில் நடைபெற்றதாகவும், இப்படியான சம்பவங்களால் பாகிஸ்தானுக்கே அதிகளவு இழப்புக்கள் ஏற்படுவதாகவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் மேலும் தெரிவித்தார்.

இந்திய எல்லைக்குள் ஊடுருவிய ஹெலிகொப்டரே இந்தியப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது. (சு-சி)

---

## குமாரி புறப்பட்டது

குமாரி கப்பல் 70க்கும் மேற்பட்ட தபால் பொதிகளுடன் நேற்று டருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுச்சென்றது.

இக்கப்பல் விரைவில் மா ஏற்றிக்கொண்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வரவிருப்பதாகவும், இதேநேரம் அடுத்த மாதம் 2ம் அல்லது 3ம் திகதிகளில் குமண கப்பலும் பருத்தித்துறைக்கு வரவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(வி-160-5)

---

## கிராமசேவையாளர் பரீட்சை பரீட்சை நிலைய இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் கிராம சேவையாளர் பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களில சில மாற்றம் செய்யப்பட்டுள்ளதென யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் தோற்றும் பரீட்சார்த்திகள் வேம்படி மகளிர் கல்லூரியிலும்.

நெடுந்தீவு மகாவித்தியாலயம், ஊர்காவற்றுறை சென். மேரீஸ் றோ. க பாடசாலையில் உள்ள பரீட்சை நிலையங்கள் யாழ். இந்துக்கல்லூரி மண்டப இலக்கம் இரண்டிலும் — பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகியவற்றிலுள்ள பரீட்சை நிலையங்களில் தோற்றும் பரீட்சார்த்திகள் கொக்குவில் இந்துக் கல்லூரி பரீட்சை நிலையத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

---

### வலி. வடக்கிற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை தளபதி ஹமில்டன் வனசிங்க நேற்று விஜயம் செய்தார்.

தெல்லிப்பளை, அளவெட்டி வடக்கு, இளவாலை, மாதகல் பகுதிக்கு இவர், யாழ்.மாவட்டத் தளபதி ஜெரி. டி. சில்வாவுடன் விஜயம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நேற்று ஹமில்டன் வனசிங்க வவுனியா, அநுராதபுரத்திற்கும் விஜயம செய்துள்ளார். (சி)

---

### கிழக்கு பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் திடீர், தாக்குதல்களினால் கிழக்கில் பெருமளவு படையினர் கொல்லப்படுவதுடன், ரோந்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளமை குறித்தும் இம்மாநாட்டில் தீவிரமாக ஆராயப்பட்டது. [சி]

---

## வீடு பார்க்க சென்றோர் படையினரிடம் சிக்கினர்

(ஏழாலை)

இராணுவத்தினர் அளவெட்டி வடக்கு பகுதியில் இல்லையென எண்ணி அப்பகுதிக்கு திங்கட்கிழமை காலை 7 மணிக்கு உடமைகளை எடுப்பதற்கு சென்ற மூவர் இராணுவத்தின் பிடியில் அகப்பட்டனர்.

இச்சம்பவத்தில் செல்லப்பாதம்பித்துரை (வயது58) இராசையா தங்கம்மா (வயது 64), வைரமுத்து சிவலிங்கம் (வயது 55) என்பவர்களே பிடிபட்டனர்.

இவர்கள் அளவெட்டி வடக்கு அம்மன்கோவிலடியை சேர்ந்தவர்கள் ஆவர். இது பற்றி யாழ். செஞ்சிலுவை சங்கத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது

---

### சாகும் வரை

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அரசு முடிவு செய்திருப்பதை எதிர்த்து அர்பாறை விவசாயிகள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அரசுக்கு அறிவித்துள்ளார்கள்.

விவசாய அமைப்புக்கள் இதுகுறித்து கண்டனத்தை விவசாய ஆராய்ச்சித்துறை அமைச்சுக்கும் புனர்வாழ்வு அமைச்சருக்கும் தெரிவித்துள்ளன

அன்ஞசி செய்கைக்கு இந்நிலத்தை வழங்குவது தொடர்பாக அமெரிக்காவும்-இலங்கையும் ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்-சி)

---

## அகதிகள் விவகாரம்: தமிழக அரசு மறுப்பு

(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கை அகதிகள் கட்டாயத்தின் பேரில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை நீதிமன்றத்தில தமிழக அரசு மறுத்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எம். ராம்தாஸ், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பா. நெடுமாறன் ஆகியோர் சார்பில் நீதிமன்றத்தாக்கல் செய்த முறையீட்டுக்கே மேற்கண்டவாறு தமிழக அரசு பதிலைச் சமர்ப்பித்துள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அகதிகளை நேரில் பார்த்து அவர்கள் தாமாகவே நாடு திருப்புவது குறித்து திருப்தி அடைந்திருக்கிறார்கள் என்றும் மேற்படி பதிவில் தமிழக அரசு சுட்டிககாட்டியுள்ளது. (சு)

---

### கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இவ்வாறு மேற்படி 3 மாவட்ட முகாம்களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இப்பகுதிகளுக்கு மேலதிக படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

## வேலை நிறுத்தத்தால் கொழும்பு துறைமுகத்திற்கு இராணுவம் அழைப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருவதினால், பாதுகாப்பின் நிமித்தம இராணுவம் அங்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் தற்போது தாமத வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதனால் துறைமுகத்தினுள் நிறுத்தப்பட்டிருக்கும் 38 கப்பல்களிலிருந்து ஏற்றுமதி இறக்குமதி வேலைகள்பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டிருந்த பல கப்பல்கள் மேற்படி வேலைநிறுத்தத்தினால் திரும்பிச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதேநேரம் துறைமுகத் தொழிலாளர் சங்கங்களுக்கும் அரசுக்குமிடையில் இருதடவைகள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் எந்தவித தீர்வும் எட்டப்படவில்லையென்றும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி)

---

### 300 கனரக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும், தமிழ்க்குழுவும் மாதகல், இளவாலை, அளவெட்டி வடக்குப்பகுதிகளில் நிறைந்து நிற்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். படையினர் தினமும் பல வீடுகளை குண்டு வைத்துத் தகர்ப்பதாகவும் கூறினர். (56-சு)

---

### அடுத்த கட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜா, யாழ். பொலிஸ் சுப்பிரின்டன் ஜெயராயஸ் உட்படப் பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனராம்.

யாழ் குடாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பொலிஸ்நிலையங்களை அமைப்பது குறித்தும் இவர்கள் ஆராய்ந்துள்ளனர். (சி-க)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/ 9136/

---

## நல்லூரில் மதில்சுவர் வீழ்ந்து 30 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த கேர்த் திருவிழா நேற்றைய தினம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ வெகுசிறப் நடந்தேறியது. தேர் உற்சவ நிகழ்வின்போது ஏற்பட்ட சன நெருசல் காரணமாக கோவிலுக்கு தெற்குபக்கமாக இருக்கும் நாவலர் மணிமண்டபத்தின் கிழக்குப்புறமாக உள்ள மதில்சுவர் இடிந்து விழுந்ததில் சுமார் 30க்கும் அதிகமானோர்கள் காயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் உடனடியாக அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த காவல் துறையினர் சென்யோன் அம்புலன்ஸ், முதலுதவிப் படையினர், சாரணியத்தொண்டர்களால் அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். அரசினர் மருத்துவ மனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் சிறுகாயங்களுக்குள்ளானோர்கள் ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள தீவக இடம்பெயர்ந்தோருக்காக அமைக்கப்பட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்பட்டனர்.

காயமடைந்த பல யாழ். ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டுள்ளனர்

காயமடைந்தோர் விபரம்: செல்வி சிவசாபன சிவராசா (20 வயது) குமாரவீதி, நல்லூர்; எஸ். பாலசுந்தரம் [37 வயது) யாழ்ப்பாணம். எஸ் பாஸ்கரன் (45 வயது) யாழ்ப்பாணம் எம். நகுலேஸ்வரி (40 வயது) ராஜா தியேட்டர் யாழ்ப்பாணம், முருகதாஸ்ஹரிதாஸ் வயது13 யாழ்ப்பாணம், வி. காந்தரூபன் (வயது 22) ஆனைக்கோட்டை, தனபாலசிங்கம் இலங்கேஸ்வன் (வயது 19) உரும்பராய் கிழக்கு செல்வி கோபாலசிங்கம் பற்றோதினி (வயது 33] கந்தர்மடம், யோகேஸ்வரன் சிவபாலன் (வயது 08) 3-ம் கட்டை நல்லூர் வி.சிவபாதம் (வயது 40) ஜெயந்தி [வயது14 கந்தர்மடம், திருமதி நடேசபிள்ளை [வயது 47], சாவகச்சேரி நெரிசலின்போது பலர்காயப்பட்டுள்ளனர்.

(56-75-158-சி

---

## செஞ்சோலை இசை மாலை

(யாழ்ப்பாணம்)

செஞ்சோலை இசைமாலை பற்றிய விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

29ம் திகதி கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

30ம் திகதி மானிப்பாய் மாவீரர் கலையரங்கம்.

31ந் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரி. நேரம்: மாலை 7-30 மணி.

---

### காரைநகரிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலை, சில்லாலை ஆகிய கிராமங்களின் கரையோரப் பகுதிகளில் விழுந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன.

சேத விபரங்கள் அறியப்படவில்லை. 137)

---

### எதிர்க்கட்சியினருக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பை அதிகரிக்குமாறு பல உறுப்பினர்கள் கோரியுமுள்ளனராம். இதேவேளை கொலையாளிகளின் பார்வை தற்போது பத்திரிகையாளர் பக்கமும் திரும்பயுள்ளதாம். [சி]

---

### தமிழ்க் கட்சிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திட்டமொன்றை முன்வைக்கவுள்ளதாக தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் அனைத்தையும் இணைத்து தனி ஒரு சபை அமைக்கவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோரியிருந்தது.

இதனைத் தமிழ்க்கட்சிகள் நிராகரித்ததால் இவற்றுக்கிடையிலான உறவும் பாதிப்பு ஏற்பட்டுளளதாம்.

---

### பண்டத்தரிப்பு நோக்கி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஷெல் தாக்குதலினால் காயமடைந்தவர்கள் ஆபத்தான நிலையில் அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு, அனுமதிக்கப்பட்டனர்.

இராணுவத்தினரின் இத்தாக்குதல்களால் பண்டத்தரிப்பில் இடம் பெயராதிருந்த ஏனைய குடும்பங்களும் பீதியடைந்து, அவசரம் அவசரமாக அகப்பட்ட பொருட்களுடன் மானிப்பாய் நோக்கிச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. [139-56]

---

## அகதி முகாமில் மரணம்

(மானிப்பாய்)

மானிப்பாய் அகதி முகாமில் தங்கியிருந்த வயோதிப மாது ஒருவர் நேற்று புதன் காலை திடீரென மரணமானார்.

வலிமேற்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் மாதகலிலிருந்து இடம் பெயர்ந்து மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முகாமில் மனமுடைந்த நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்த சதாசிவம் தங்கம்மா என்ற 70 வயதுடைய பெண்ணே நேற்று திடீரென மரணமானார். (71)

---

### ஜேர்மன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்கள் கடத்தப்பட்டது தொடர்பாக அறிவிக்கப்பட்டதையடுத்தே விமானப்படையினர் இவற்றின் மீது தாக்குதலை நடத்தினராம். [சு-சி]

---

### மன்னார்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு இடம்பெற்ற சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விஷமிகள் சிலர் இச்செயலில் ஈடுபட்டிருக்கலாமெனவும் நம்பப்படுகிறது

'சனிவிலேஜ்' அகதி முகாமில் பெருமளவு தமிழகதிகள் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (சு-சி)

---

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகட்கு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியும் இந்நிதிஉதவிகளுக்கு உதவியளித்துள்ளது.

கடன் அடிப்படையில் வழங்கப்படும். இவ்வுதவிகளை வங்கிகள் மூலம் இவ்வருட இறுதிக்குள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக விவசாய அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. [கே]